**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4601

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 28.10.2021

Accepted: 05.12.2021

Published: 01.01.2022

Citation:
Rathinakumar, N., and M. Karthikesan. "Ethnography – Origin, Environment, Theories." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 17–28.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4601

*Corresponding Author:
rathnastamil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Ethnography – Origin, Environment, Theories

**Dr. N. Rathinakumar**

*Assistant Professor, Madura College, Madurai, Tamil Nadu, India*

https://orcid.org/0000-0002-2930-576X

**M. Karthikesan**

*Research Scholar, Madura College, Madurai, Tamil Nadu, India*

**Abstract -** Indian societies are seen as having multiple cultural elements. The cultural and customs of each branch are different as there are different branch castes within the same caste. Literatures about such different social groups have appeared in Tamil. The practice of using literature as ethnographic data is found in the field of anthropology. It has been accepted by scholars that it is the same to obtain direct information and to take a writer's confession as his confession when it comes to the study of species. This article deals with racism and its relation to literature and ethnography.

**Keywords:** Tamil Literature, Anthropology, Ethnography, Evolution, Etymology

**References**

1. Oxford Etnlish –English – tamil Dictionary, p.490
2. Maheswaran, C. Ethnography, p.7
3. Above, p.7
4. Thananjayan, A. Histories of Marginal People, p.3
5. Anbuchelvan, T. Arima Vision, Quarterly, 3: 4, January 2010, p.26
6. Stephen, N. Literary Ethnography, B.A.I.
7. Bhagwatsalabharati, Cultural Anthropology, p.21
8. Above, p.31
9. St. Stephen, BC, pp. 13-14
10. Bhagavatsalabharati, Ancient Tamil Culture, p.32
11. Silambu Na. Selvarasu, Re-reading of Sangam Literature, p.11
12. DD Kosambi, History and Culture of Ancient India, p.25
13. Mani.co.Panneerselvam, Minor Tribal, p.2
14. Dhananjayan, A. BC, pp.3-4
15. Suppurayalu, K.A. Alternative Space, Journal - 11, p.17
16. Henry Whitehead, Introduction to the Village Gods of South India Bhagwatsalabharati, p.8
17. Padmabharati, Karasur, Narikkuvar Ethnography, p.8
18. Ratnam, K. (Mo.A.), Narikkuvar Ethnography, p.8
19. Padmabharati, Karasur Narikkuvar Ethnography, pp.9-10
20. Sivasubramanian, A. Ethnography and Tamil Novel, p.10
21. Neelapathmanathan, Generations (in preface), p.4

# இனவரைவியல் – தோற்றம், சூழல், கொள்கைகள்

*முனைவர் ந. இரத்தினக்குமார்*
உதவிப்பேராசிரியர், மதுரைக் கல்லூரி, மதுரை

*மெ. கார்த்திகேசன்*
ஆய்வாளர், தமிழ்த்துறை, மதுரைக் கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***
*இந்தியச் சமூகங்கள் பலபடித்தானப் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. ஒரே சாதிக்குள் பல்வேறு கிளைச் சாதிகளைக் கொண்டிருக்கும் நிலையில் ஒவ்வொரு கிளைச் சாதிக்குமான பண்பாட்டு, பழக்கவழக்கங்கள் மாறுபட்டு அமைகின்றன. இத்தகைய வேறுபட்டச் சமூகக் குழுக்களைப் பற்றிய இலக்கியங்கள் தமிழில் தோன்றியுள்ளன. இலக்கியங்கள் இனவரைவியலுக்கானத் தரவுகளாகக்கொள்ளும் நடைமுறை மானிடவியல் துறையில் காணப்படுகிறது. இனங்களைப் பற்றிய அறிதலை நோக்கமாகக் கொள்ளும்போது நேரடியானத் தகவல்களைப் பெறுதலும் ஓர் இலக்கியவாதியின் வாக்குமூலமாக அவரது இலக்கியத்தைக் கொள்வதும் ஓரேவிதமானதே என்பதும் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்கட்டுரை இனவரைவியல் குறித்தும் இலக்கியங்களுக்கும் இனவரைவியலுக்கும் உள்ளத் தொடர்பு குறித்தும் எடுத்துரைப்பதாக அமைகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழிலக்கியம், மானிடவியல், இனவரைவியல், பரிணமித்தல், இனக்குழுவியல், எடுத்துரைப்பியல்*

## முன்னுரை

சமூகத்தை ஆராயும் துறைகள் புதிய நாடுகளைக் கண்டுபிடித்து அங்கெல்லாம் காலனிகளை உருவாக்கிய ஐரோப்பிய நாடுகளில் தோன்றி வளர்ச்சி பெற்றன. சமூகம் பொதுவான தன்மைகள் சிலவற்றைக் கொண்டுள்ளன. உலகெங்கும் தொடக்ககாலச் சமூகம் அதாவது தொன்மைச் சமூகம் என்பது வேட்டைச் சமூகமாக இருந்திருக்கிறது. உணவு சேகரித்தலை முதன்மையான வாழ்வியல் பிரச்சினையாகக்கொண்ட சமூகங்களே பெரும்பாலும் காணப்பட்டன. இதனை இனக்குழுச் சமூகங்கள் என்றும் அழைக்கின்றனர். வேட்டையில் ஈடுபடுவதும் அதன்மூலம் கிடைக்கும் உணவினை சமமாகப் பகிர்ந்துகொள்ளுதலும் தொடக்ககாலச் சமூகத்தினரின் வழக்கமாக இருந்தது. தொழில்நுட்பமும் நாகரிகமும் வளர்ச்சி பெற்றதால் புதிய கருவிகளைக்கொண்டு வேட்டையாடுதல், விலங்குகளைப் பழக்கி பயன்படுத்திக் கொள்ளுதல் என மேம்பட்டது. பின்னர் வேளாண்மைக்கான நிலங்கள் காடுகளை அழித்து உருவாக்கப்பட்டன. கூட்டு உழைப்புப் படிப்படியாக மறைந்தது. தனிமனித உழைப்பும் அதன்மூலம் வருவாயும் ஒருவர்க்குப் போதுமானதாக இருந்தது. தனி உழைப்பில் உபரியாக மிச்சமானவை சொத்தாகப் பரிணமித்தன. சொத்து உடைமைச் சமூகத்தைத் தோற்றுவித்தது. தாய்வழிச் சமூக நிலைமைகள் மாற்றமடைந்தன. தந்தையாதிக்கச் சமூகம் உருப்பெற்றது. பெண் ஆணுக்கு அடங்கியவளாகக் குடும்பப் பணிகளை மேற்கொள்ளும் நிலைக்கு ஆளாக நேரிட்டது. பண்டைய

மனிதனிலிருந்து தற்காலத்து மனிதர்கள் வரை தொடர்ச்சியான வளர்ச்சி எல்லா சமூகங்களிலும் ஏற்பட்டு விடவில்லை. வெவ்வேறு சமூகக் குழுக்கள் இயன்ற அளவில் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்றன. சில சமூகங்கள் வேட்டை நிலையிலேயே இருப்பதைக் காணமுடிகிறது. சில சமூகங்கள் மேய்ச்சல் சமூக நிலையிலும் சில சமூகங்களில் தாய்வழி மரபு பின்பற்றப்படுவதையும் உடைமைச் சமூகப் பண்பாடுகளை அறியாத சமூகங்கள இருப்பதையும் காணலாம். வேட்டைச் சமூக நிலையில் வாழும் மக்கள் உணவு சேகரித்தலை முதன்மையாகக் கொண்டவர்கள். அவர்கள் ஆறலைத்துக் கொள்ளையடிப்பதிலும் ஈடுபடக் கூடியர்கள் இன்றுவரையிலும் இத்தகைய சமூங்களை இனங்காண முடியும். இச்சமூக அசைவாக்கங்களை இனவரைவியல் உற்று நோக்கிக் தொகுக்கிறது. நவீன ஆய்வு முறையியலாக அறியப்படும் இனவரைவியலை விவாதிப்பது இங்கு நோக்கமாக அமைகிறது.

### இனவரைவியல் – விளக்கம்

சமூகம் பல இனக்குழுக்களின் மொத்தமாகும். ஒவ்வொருவரும் தமக்குள் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் நிலையில் சமூகம் முழுமையடைகிறது. பல இனக்குழுக்களுக்குள் வெவ்வேறு பழக்கவழக்கங்கள் காணப்படும். ஓர் இனத்தினைப் பற்றிய முழுமையான ஆய்வை இனவரைவியல் எனலாம். மானிடவியலில் ஒரு முறையியலாக இது காணப்படுகிறது. மனிதனைப் பற்றி ஆராயும் அறிவியலாக மானிடவியல் காணப்படுகிறது. அதன் ஒரு கூறாக இனவியல் அமைகிறது. ஓர் இனத்தைப் பற்றிய முழுமையான ஆய்வினைக் குறித்து அமைவது இனவரைவியல் ஆகும். “இனவரைவியல் என்பது மக்கள் இனத்தையும் அவர்களது பண்பாட்டையும், பழக்க வழக்கங்கள், சடங்குகள் ஆகியவற்றினை அறிவியல் நோக்கில் எடுத்துரைப்பது ஆகும்”[1] என ஆக்ஸ்போர்டு அகராதி குறிப்பிடுகிறது. இனவரைவியலை இனக்குழுவியல் என்றும் அழைக்கின்றனர். “ஓர் இனக் குழுவின் (Ethnos) சமுதாயப் பண்பாட்டு அமைப்பொழுங்கை (Socio-Coutural System) ஆய்வின் வழியாக முழுதளாவிய அளவில் (Holisticlevel) வரையும் இயலே இனக்குழுவரைவியல் (Ethnography) ஆகும்.”[2] என்ற கூற்றினூடாக இனக்குழு வரைவியல் என்பது முழுமையாக ஓர் இனக்குழுவின் பண்பாட்டு அமைப்பினை வெளிப்படுத்துவது எனலாம். மேலும் பண்பாட்டு மானிடவியலின் அடித்தளமாக விளங்குவது இனக்குழுவரைவியலும், இனக்குழு ஒப்பாய்வியலுமாகும. “இத்தகைய இனக்குழு வரைவியலானது பண்பாட்டு மானிடவியலின் இருபெரும் உள்பிரிவுகளுள் ஒன்றாக விளங்குகிறது. இனக்குழுவரைவியல், இனக்குழுவொப்பாய்வியல் (Ethonology) என்னும் இந்த இரு உள் பிரிவுகளின் அடித்தளம் மீதே பண்பாட்டு மானிடவியலும் செயல்படுகிறது”[3] என்று கூறுகிறார் சி.மகேசுவரன். “Ethohtsphy” என்னும் ஆங்கிலச் சொல் Ethnois. praphein ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. Ethonos என்பதற்கு இனம் (race) என்பது பொருள், இனக்குழு (Ethinic group), மக்கள் என்பது பொருள். To write என்பதற்கு எழுதுவது அல்லது வரைதல் என்பது பொருள். ஆகவே இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது”[4] என்று பக்தவத்சலபாரதி குறிப்பிடுகிறார். இனவரைவியல், இனக்குழுவியல் என்பன ஒரே பொருளில் பயன்படுத்தப்படும் சொற்களாகும். அவை இனக்குழுக்களைப் பற்றி எழுதுதல் அல்லது வரைதல் என்று குறிக்கத்தக்கனவாகும். இனவரைவியல் குறித்து பல்வேறு சூழல்களில் இனவரைவியல் ஆய்வுகளை மேற்கொண்ட அறிஞர்கள் அதனைப் பற்றி விளக்கி உரைத்துள்ளனர்.

"ஒரு குறிப்பிட்ட மக்கள் குழு அல்லது வட்டாரத்தில் காணப்படும் அனைத்து வகையான மரபுகள் பற்றி மேற்கொள்ளப்படும் ஆய்வே இனவரைவியல் என்றும் ஏதேனும் ஒரு பண்பாட்டைப் பற்றி எழுதப்பட்ட வரைவு அல்லது விளக்கமே இனவரைவியல் என்றும் இனவரைவியலுக்கு வரையறைகள் தந்துள்ளனர். ஒரு குழு அல்லது பண்பாட்டைப் பற்றி விளக்கிக் கூறும் ஒரு வருணனைக் கலை மற்றும் அறிவியல்தான் இனவரைவியல். இந்த விவரிப்பானது எங்கோ ஒரு நாட்டிலிலுள்ள சிறிய இனக்குழுவைப் பற்றியதாக இருக்கலாம். அல்லது சித்தரிப்பாகவும்கூட இருக்கலாம்"[5] என்று அறிஞர்களின் வரையறைகளை எடுத்துரைக்கிறார் ஆ.தனஞ்செயன். இதிலிருந்து பல்வேறு சமூகங்கள் வாழுகின்ற இவ்வுலகில் ஒவ்வொரு சமூகத்தின் தனித் தன்மைகளும் அவர்தம் பழக்க வழக்கங்கள் குறித்தும் எடுத்துரைப்பதாக இனவரைவியல் அமைகிறது என்பதை உணர முடிகிறது.

### மானிடவியலும் இனவரையிலும்

சமூக மனிதர்களின் வாழ்வியல் குறித்த ஆய்வுகள் தொடக்க காலத்திலிருந்தே காணப்படுகிறது. மானிடவியல் என்பது மனிதர்களைப் பற்றிய அறிவியல் என்று கூறப்படுகிறது. "ஆந்திரோப் என்பது மனிதனையும் ஆலாஜி என்பது அறிவையும் சுட்டுவதாகக் கூறுவார். இதன் அடிப்படையில் மனிதனைக் குறித்த அறிவுத் துறையே மானிடவியல் என்பார். இதையே மனிதனைப் பற்றியும் அவனது ஆக்கங்களையும் நடத்தைகளையும் ஆராயும் அறிவியல் துறையே மானிடவியல் என்று சண்முகலிங்கன் வரையறுத்துள்ளார்"[6] என்ற ஞா.ஸ்டீபன் கருத்துரைக்கிறார். பல்வேறு அறிஞர்கள் மனிதர்ளைப் பற்றிய அறிவுத் துறையே மானிடவியல் என்று கூறுகின்றனர். மனிதர்களையும் அவர்கள் சார்ந்த சமூகங்களைப் பற்றியும் பன்னெடுங்காலமாக ஆய்ந்து எழுதி வந்திருக்கின்றனர். கிரேக்கத் தத்துவ அறிஞரான செனோபென் பல்வேறு சமூகங்களைப் பற்றி அறிந்து அவற்றை பதிவு செய்தார். ஹெரோடாட்டஸ் மக்களினங்ளைப் பற்றிய குறிப்புகளைப் பல மைல்கள் நடந்து பயணித்துச் சேகரித்தார் எனக் கூறப்படுகிறது. இதுபோல் பிளேட்டோ, அரிஸ்டாட்டில், எப்பிக்கூரஸ், சாக்ரட்டீஸ், டெமோகிரிட்டஸ் போன்றோரும் மக்களினங்களைப் பற்றி சிந்தித்தனர். "தொடக்க காலத்தில் உலகின் பல பகுதிகளுக்கும் அரிய பயணங்களை மேற்கொண்டவர் ஹெரோடாட்டஸ். போக்குவரத்து வளர்ச்சியுறாத அக்காலத்தில் இவர் இருந்த இடத்திலிருந்து கிழக்கு மேற்காக 1700 மைல்களும், தெற்கு வடக்காக 1600 மைல்களும் சென்று வந்தவர் என்பர் வரலாற்றியலார். இவர் மேற்கொண்ட பயணங்கள் மூலம் ஐம்பதுக்கும் மேற்பட்ட மக்களனித்தவர்களைக் கண்டு அவர்களின் வாழ்க்கை முறைகளை விரிவாக எழுதினார். அதோடு இவர் சென்று வந்த பகுதிகளைப் பற்றியும் அவற்றின் புவியியல் இயற்கைக் கூறுகளைப் பற்றியும் விரிவாக எழுதினார்"[7] என்று கூறுகிறார் பக்தவத்சலபாரதி. பண்டையக் கிரேக்கத்தில் வாழ்ந்த அறிஞர்கள் மானிடவியல் நோக்கிலான ஆய்வுகளைச் செய்தனர். பின்னர் புத்தொளிக் காலத்திற்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகள் புதிய நாடுகளைக் கண்டறியும் ஆவலில் உலகமெங்கும் சுற்றி வரும் வாய்ப்பினைப் பெற்ற தொழில்நுட்பத்தினைக் கொண்டிருந்தனர். அதன்விளைவாகக் கப்பலில் உலகின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்த இனக்குழுக்களைக் கண்டறிந்தனர். மார்க்கபோலோ, வாஸ்கோடகாமா, கொலம்பஸ் போன்றோர் புதிய இனக்குழுக்களைப் பற்றி எழுதினர். "கிரிஸ்டோபர் கொலம்பஸ் (கி.பி.1451-1506) அமெரிக்க

நிலப்பகுதியைக் கண்டுபிடித்தவர் என்ற செய்தி மட்டுமே பலருக்குத் தெரியும். இவரது பயணத்தின்போது இவர் தொகுத்த இனக்குழுவியல் செய்திகளும் பிற நிகழ்ச்சிகளும் பலருக்குப் புதுமையான செய்திகளாக இருந்தன. இவரது புகழ்மிக்கக் கப்பல்களில் உலகின் புதிய புதிய பகுதிகளைக் கண்டுபிடிக்கும் நோக்கில் பயணத்தைத் தொடங்கினார். பிற புத்தாய்வாளர்களைப் போன்றே இவரும் அவர் சென்ற இடங்களில் வாழ்ந்த மக்களைப் பற்றி பெருமளவு செய்திளைச் சேகரித்தார்."[8] என்ற கூற்றானது புத்தாய்வுக் காலத்திற்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த மாலுமிகள் புதிய மக்களினங்களைக் கண்டு அவர்களைப் பற்றிய செய்திகளைச் சேகரித்தனர். பல்வேறு சமூகங்கள் குறித்த செய்திகளைச் சேகரித்தல் என்னும் செயல்பாடு பிற்காலத்தில் காலனிகளை உருவாக்கிய ஐரோப்பிய நாடுகளுக்கு உதவியாக அமைந்தன. இனமூக்குவியல் ஆய்வுகள் மானிடவியலின் ஒரு பகுதியாக இருந்தன.

இனவரைவியலுக்கும் மானிடவியலுக்குமான தொடர்பினைக் குறித்து "இனவரைவியல் என்பது மானிடவியலின் குறிப்பாகப் பண்பாட்டு மானிடவியலின் இன்றியமையாதப் பிரிவு ஆகும். எப்படி நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் கள ஆய்வை நம்பியிருக்கின்றனவோ அதனைப் போன்று மானிடவியல் ஆய்வுகளும் இனவரைவியல் ஆய்வுகளை நம்பியிருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட பண்பாட்டை அல்லது இனக்குழுவை ஆய்வுக்குட்படுத்த வேண்டுமானால் அப்பண்பாட்டின் அல்லது இனக்குழுவின் இனவரைவியல் முதன் முதலில் தொகுக்கப்பட வேண்டும் என்பதே மானிடவியலின் முறையியல் ஆகும். இனவரைவியல் இரண்டு வகையான பரிமாணங்களைக் கொண்டது. ஒரு பக்கத்தில் அது ஒரு முறையியலாகவும் மறுபக்கத்தில் வரிவடிவமாக்கப்பட்ட பண்பாடாகவும் அமைகிறது. யாரைப் பற்றி எழுதுகின்றோமோ அந்த மக்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றிய விளக்கவுரைகளையும் வரைவு அறிக்கைகளையும் உருவாக்கக் கூடிய அலசல் முறையும் அதன் வெளிப்பாடாகிய எழுத்து வடிவமுமே இனவரைவியல் என்று அதன் பரிமாணங்கள் விளக்கப்படுகின்றன"[8] என்று குறிப்பிடுகிறார் ஞா.ஸ்டீபன். இனவரைவியல் மானிடவியலின் முறையியலாகக் கொள்ளப்படும் அதே வேளையில் எழுத்து வடிவில் அது ஒரு பண்பாட்டுத் தரவுகளாகவும் காணப்படுகிறது. ஆகவே மானிடவியல் ஆய்வுகள் இனவரைவியலைக் கொண்டே தொடங்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பண்பாட்டினையோ அல்லது இனக்குழுவினையோ பற்றி முழுமையாக ஆய்வு செய்து செய்திகளைச் சேகரித்துக் கொள்ளும் போது அது இனவரைவியல் ஆய்வாக அமைகிறது. மானிடவியல் ஆய்வுக்கும் உதவும் முகமாகவே இனவரைவியல் காணப்படுகிறது. மானிடவியலின் அடித்தளமாக விளங்குவது இனவரைவியல் என இதன்மூலம் அறியலாகிறது.

### சமூகப் பண்பாட்டு இனக்குழுவியல்

சமூகம் என்பது மனிதர்களின் ஒருங்கிணைவைக் குறித்தாலும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் மக்கள் தம்மை அடையாளப்படுத்திக் கொள்பவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு மனித உடலும் குறிப்பிட்ட அடையாளங்களைக் கொண்டிருக்கிறது. அவ்வடையாளங்கள் இனம், மொழி, நிலம் சார்ந்து அமைகின்றன. ஒவ்வொரு இனக்குழுவின் நில எல்லைகள் அவர்களது வாழ்வாதாரத்திற்கான அடிப்படைகளைக் கொண்டுள்ளன. மலைப் பகுதிகளும், சமவெளிப் பகுதிகளும், காட்டுப் பகுதிகளும், கடற்கரையோரப் பகுதிகளும் காணப்படுகின்ற தமிழக நிலப் பகுதிகளில் அந்தந்தந்த நிலம் சார்ந்த பண்பாட்டு வழக்கங்கள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட நிலப்பகுதியின் தட்பவெப்ப சூழல்கள் அங்கு வாழும் மக்களின்

வாழ்வியலை தீர்மானிக்கின்றனவாக அமைகின்றன. வழக்காறுகளும், சொலவடைகளும், பழமொழிகளும் கூட நிலப்பகுதியினைச் சார்ந்தும் உழைப்பு சார்ந்துமே உருப்பெறுகின்றன. மொழியின் தன்மைகளும் மாறுபட்டு அமைவதற்கு இடச்சூழல் காரணமாகிறது. இதனைத் திணை சார்ந்த இனக்குழுவியல் என்று அழைக்கின்றனர். தொல்காப்பியர் குறிப்பிடும் திணைகளுக்கான கருப்பொருள், உரிப் பொருள் என்பன இனவரைவுத் தரவுகளை ஒத்தனவாகும். "பரந்து விரிந்துள்ள இந்த உலகில் ஐந்து வகையான திணைகளே உள்ளன. அந்த ஐந்திணைகளும் சங்க காலத் தமிழகத்திலேயே காணப்பட்டன. தமிழ் நிலத்தின் தனித்துவங்களில் ஒன்றாகும். உலகெங்கும் பரவியிருந்த ஐந்து நில வகைகள் தமிழகத்தில் நுண்ணியல் பகுதிகளாகக் காணப்பட்டன. இந்த ஐந்திணைகளிலும் வாழ்வு முறை வெவ்வேறு வடிவங்களில் வளர்ந்து வந்தது. ஒவ்வொரு திணையிலும் மக்கள் தன்னியல்பான வளர்ச்சியோடு அசைவியக்கம் பெற்றிருந்தார்கள்"[10] என்று ஐந்திணைகளும் சமகாலத்தில் நிலவியிருந்ததையும் ஐந்தும் வெவ்வேறு வடிவங்களில் வேறுபட்டிருந்தன என்றும் குறிப்பிடுகிறார் பக்தவத்சலபாரதி. சமூகப் பண்பாட்டுப் படிமலர்ச்சியில் ஒவ்வொரு திணையும் அடுத்தடுத்தக்கட்ட வளர்ச்சியினைக் கொண்டனவாகும். ஆனால் தமிழகத்தில் வேறுபட்ட வளர்ச்சிநிலைகள் சமகாலத்தில் நிலவியிருந்தன என்பது அவற்றை நுண்ணியல் பகுதிகளாக சுட்ட ஏதுவாகின்றன. வேட்டைச் சமூகமும், மேய்ச்சல் சமூகமும், வேளாண் சமூகமும் ஒரே காலத்தில் நிலவியிருந்தன என்பதை எடுத்துக்காட்டுவதாக சங்க இலக்கியம் காணப்படுகிறது. "சங்க காலத்துப் பாடல்கள் அவை தோன்றுவதற்கு முன்பிருந்த காலத்துச் சமூகப் பண்பாட்டுக் கூறுகளையும் பிரதிபலித்துள்ளமையை அறிய முடிகிறது. சான்றாகக் குறிஞ்சிப் பாடல்களை எடுத்துக்காட்ட முடியும். முன்புள்ள பகுதியில் கூறியது போலக் குறிஞ்சிப் பாடலின் உரிப்பொருள் வேட்டைச் சமூகத்தில் பாடப்பட்ட சுதந்திரமான காதல் பாடுபொருள், அச்சமூகம் பரிணாம வளர்ச்சி அடைந்து ஆநிரை உடைமைச் சமூகமாக மாறும்போதும் அது அழிந்து விடுவதில்லை. மாறாக ஆநிரை உடைமைச் சமூகத்திற்குத் தகத் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளும். அதேபோல் ஆநிரை உடைமைச் சமூகம் வேளாண் பண்பாட்டுக் கூறுகளையும் ஆநிரை உடைமைச் சமூகப் பண்பாட்டுக் கூறுகளையும் வேளாண் சமூகப் பண்பாட்டுக் கூறுகளையும் பெற்றே வளர்ச்சி அடைந்து இருக்கும்"[11] என்று சிலம்பு நா.செல்வராசு குறிப்பிடுவதற்கிணங்க, ஒரு சமூகம் மாறி பிறிதொரு சமூகமாக மாற்றமடைந்து வளர்ச்சி அடையும் போது முந்தையச் சமூகத்தின் சில பழக்க வழக்கங்களும் பண்பாட்டுக் கூறுகளும் காணப்படும் அல்லது கடத்தப்படும். நாகரிக சமூகத்திலும் பண்டைத் தமிழ்ச் சமூக வழக்கங்கள் காணப்படுவதை அறியலாம். தொழில்நுட்பமும் அறிவியலும் மேம்பட்டச் சமூகமாக இருந்தபோதிலும் இன்றைய நிலையிலும் பண்டைய வழக்கங்களைக் கொண்ட சமூகங்களைக் காணமுடியும். சமூகப் பண்பாட்டுப் படிமலர்ச்சியில் வளர்ச்சியடையாமல் உறைந்த சமூகங்களாகவே இருக்கும் என்பதை "ஆண்டுக்கு ஆண்டு திரண்ட மாற்றங்களைச் சிறிதும் இந்தியக் கிராமத்தில் காணமுடியாவிட்டாலும் பருவங்களின் சுழற்சியே எல்லா முக்கியத்துவமும் பெற்று விளங்குகிறது. இக்காரணத்தினாலேயே கால மதிப்பற்றக் கிழக்கு என்ற பொது உணர்வு அந்நியர்களுக்கு ஏற்படுகிறது. கி.மு.150ஐச் சேர்ந்த பார்ஹாத் சிற்பங்களில் காணப்படும் மாட்டு வண்டியும், கிராமக் குடிசைகளும் கி.பி.200ஐச் சேர்ந்த குஷாணர்களின் சிற்பங்களில் காணப்படும் ஏரும் உழவனும் திடீரென்று இக்கால இந்தியக் கிராமத்தில்

தென்படுமேயானால் அவை இங்கு எந்தவிதமான வியப்பையும் விளைவிக்காது"[12] என்ற குறிப்பில் டி.டி.கோசாம்பி கூறுவது பண்டையக் காலத்து மனிதர்களைத் தற்காலத்திலும் காணலாம் அது வியப்பன்று என்பதாகும். எனவே மனிதச் சமூகம் பழங்காலத்துப் பண்புகளைக் கொண்டிருப்பதை வைத்தே பண்டைக்காலச் சமூகம் பற்றி அறிந்து கொள்ள முடியும். இந்தியச் சூழல்களில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நாகரிகப் பண்பாட்டு வழக்கங்களைக் கொண்டவர்களும் தற்போதைய சூழலில் வாழக் கூடும் சமூகப் பண்பாட்டு வளர்ச்சியில் அவை உறைந்து போன நிலையினை உடையனவாகக் காணப்படும். இனக்குழுச் சமூக ஆய்வுகளில் இது போன்ற பண்டைய வழக்கங்களை உடைய இனக்குழுக்களின் செய்திகளை அறியலாம். அச்சமூகங்கள் பற்றிய இலக்கியங்களும் தமிழில் எழுதப்பட்டுள்ளன. சமூகப் பண்பாட்டு வளர்ச்சியில் முந்தைய சமூக எச்சங்களை உடையனவாகவே இனக்குழுக்கள் காணப்படுகின்றன.

## தமிழில் இனவரைவியல்

பண்டைய காலத்திலிருந்த புலவர்கள் தாம் வாழ்ந்த காலத்திய சமூகங்களைப் பற்றிய புனைவுகளைப் பாடல்களாகப் புனைந்துள்ளனர். அவற்றில் அன்றைய மக்களின் வாழ்வியல் சார்ந்த செய்திகளை அறிந்துக் கொள்ள முடிகிறது. "பொது வாக இலக்கியங்கள் கற்பனையானவை. அறிவியல் பனுவலல்ல. இப்படி இலக்கியங்கள் சுயக் கற்பிதங்களால் ஆனவை என்றாலும் அவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டிய இன்றியமையாமை உள்ளது. அதாவது இலக்கியப் பனுவல்களை முற்றிலும் நிராகரித்துவிட முடியாது"[13] என்று கூறுவதற்கேற்ப பண்டைத் தமிழ்ப் பனுவல்களையோ தற்காலத்து இலக்கியங்களையோ கற்பிதங்கள் என்று ஒதுக்கி விட முடியாது அவற்றிலும் மக்கள் சமூகங்களைப் பற்றி யதார்த்தமான செய்திகள் காணப்படும் என்கிறார் மணி.கோ. பன்னீர்செல்வம். குறவர்கள் பற்றிய அவரது ஆய்வில் இலக்கியங்கள் கூறுவனவற்றிற்கும் யதார்த்தத்திற்குமான தொடர்பினை வெளிப்படுத்துகிறாா. பழங்காலத்திலிருந்தே இனக்குழுக்களைப் பற்றிய செய்திகளை கூறும் வழக்கம் இலக்கியத் தொடர்புள்ளவர்களுக்கு இருந்தது. மானிடவியல் தோன்றி வளர்ந்த பின்பு அது ஒரு புதிய துறையாக வளர்ச்சி பெற்றது.

காலனிய ஆட்சிகள் ஏற்பட்ட பின்னணியில் மானிடவியல் ஆய்வாளர்கள் மக்களினங்களைப் பற்றிய அறிந்து அவற்றை அரசுக்கு அளித்தனர். அரசுகள் மக்கள் குழுக்களைப் பற்றிய செய்திகளை தம் ஆளுகை நுட்பத்திற்குப் பயன்படுத்தினர் எனக் காணமுடிகிறது. மானிடவியலுக்கு அடிப்படையாக இனவரைவியல் அமைவதால் மானிடவியல் ஆய்வு தோன்றிய வரலாறே இனவரைவியல் வரலாறாகவும் அமைகிறது. மேற்கு நாடுகளில் தோன்றி வளர்ந்ததாகவே இனவரைவியல் காணப்படுகிறது. உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்த மக்கள் கூட்டங்களைப் பற்றிய செய்திகளை அறிந்துகொள்ளும் பணியில் கடற்பயணிகளும், கிறித்தவமறைத்தொண்டர்களும் ஈடுபட்டனர். தாம் சென்று குடியேறிய பகுதிகளில் மக்களைக் குறித்து அறிந்து கொண்டதால் தான் தாம் அங்கு நிறைவேற்ற வேண்டிய பணிகளை எளிதாகச் செய்ய முடியும் என்ற நிலையில் தான் இவ்வாய்வுகள் நடைபெற்றன.

ஐரோப்பிய நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் காலனிகளை ஏற்படுத்தினர். ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளில் குடியேறிய காலனியாதிக்க நாடுகள் அங்கு வாழும் மக்களைத் தம்மிலும் கீழாகவே மதித்தனர். தம்மை உயர்ந்தவர்கள் என்றும் மூன்றாம் உலக மக்களைத் தாழ்ந்தவர்கள் என்று வரையறுத்து அவர்களுக்கு நாகரிகத்தைக்

கற்றுக்கொடுக்கும் பொறுப்புத் தங்களுக்கு இருப்பதாகக் கூறிக்கொண்டனர். தொழில்நுட்பத்தில் மேம்பட்டக் கருவிகளைக் கொண்டிருந்த ஐரோப்பியக் காலனியவாதிகள் வளர்ச்சியில் பின்தங்கியிருந்த மக்களைத் தம் கருவிகளால் அடக்கி ஒடுக்கினர். ஆயினும் அம்மக்களை எளிதில் கையாள முடிந்ததில்லை. 19ஆம் நூற்றாண்டில் மக்களை அறிந்து கொள்ளும் ஆய்வுகள் தொடக்கம் பெற்றன. இவ்வாய்வுகளே இனவரைவியல் ஆய்விற்கு முன்னோடியாகத் திகழ்கின்றன. "இனவரைவியல் என்ற ஆய்வு முறையின் தோற்றத்திலிருந்து இன்றைய காலகட்டம் வரையில் அதன் வளர்ச்சி நிலைகளை அடிப்படையாகக் கொண்டு பழைய இனவரைவியல், புதிய இனவரைவியல் என்று அதனை இரண்டாகப் பகுப்பதுண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் பழைய அல்லது மரபான இனவரைவியல் தோன்றியது. இரண்டாம் உலகப் போர் வரை அது நீடித்தது. இக்கட்டத்திலிருந்து 1970கள் வரையிலும் அதனைத் தொடர்ந்தும் வளர்ந்து வந்திருப்பது புதிய இனவரைவியல். ஒரு குறிப்பிட்ட பண்பாட்டைச் சார்ந்த உறுப்பினன், தன்னுடைய பண்பாட்டை எப்படி பார்க்கிறானோ அந்தப் பார்வைத்தளத்திலிருந்தே அப்பண்பாட்டை நோக்கும் அணுகுமுறையைக் கொண்டது தான் புதிய இனவரைவியல் என்பது"[14] என்று கூறும் ஆ.தனஞ்செயன் இனவரைவியல் அணுகுமுறைகள் காலந்தோறும் மாற்றம் பெற்றிருந்ததை வெளிப்படுத்துகிறார். மரபான இனவரைவியல் அணுகுமுறைகள் பின்பு புதிய செல்நெறிகளுக்கு ஏற்ப மாற்றங்களைப் பெற்று புதிய இனவரைவியலாக வளர்ச்சி அடைந்தது என்று கூறுவதைக் காணமுடிகிறது.

தமிழத்தில் இனவரைவியல் ஆய்வுகளை முதன் முதலாகச் செய்தவர்கள் ஐரோப்பியர்களேயாவர். மறைப்பணிக்காகவும், ஆங்கிலேயரின் கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பணியமர்த்தப்பட்ட ஆட்சிப்பணியாளர்களும் இப்பணியில் ஈடுபட்டனர் என்பதைக் காணமுடிகிறது. தமிழகப் பழங்குடிகள் குறித்தத் தகவல்களை கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அளித்த மெக்கன்ஸி நில அளவைப் பொறியாளராகப் பணி செய்ய வந்தவர் ஆவார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்களைப் பற்றிய தகவல்களை சேகரித்தார். "இலக்கியச் சுவடிகள் 1568, வட்டார ஆவணங்கள் 2070, கல்வெட்டுக்கள் 8076, மொழிபெயர்ப்புகள் 2159, பழங்கட்டட நில வரைபடங்கள் 79, பல்வேறு வரைபடங்களும் ஓவியங்களும் 2630, காசுகள் 6000, சிலைகள் 36"[15] தான் கல்கத்தாவில் வாழ்ந்த 39ஆண்டுகளில் சேகரித்தார். இதில் தமிழக வட்டாரம் குறித்த 32 சுவடிகளும், தமிழகப் பழங்குடிகள் பற்றிய 16 சுவடிகளும் காணப்படுகின்றன. ஆகவே காலின் மெக்கன்ஸியே தமிழ் இனவரைவியலின் முன்னோடியாகக் கருதப்படுகிறார். தமிழகக் கோயில்களையும் கிராம தெய்வங்களையும் குறித்த செய்திகளைத் தொகுத்தவர்களில் ஒருவரான ஒயிட்ஹெட் தென்னிந்திய கிராம தெய்வங்களைப் பற்றி தொகுத்தார் "ஹென்றி ஒயிட்ஹெட்டின் எழுத்துக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இவர் 19.12.1863இல் இங்கிலாந்தில் பிறந்தவர். கிறித்தவக் குருமாராகப் பயிற்சி பெற்றபின் இந்தியாவிற்கு வந்தார் கொல்கொத்தாவில் பிஷப் கல்லூரியின் முதல்வராக 1883 முதல் 1889 வரை பணியாற்றினார். அதன் பின்னர் சென்னையின் ஐந்தாவது பிஷப்பாக 23 ஆண்டு காலம் பணியாற்றி 14.04.1947இல் இறந்தார் இங்கிலாந்து நாட்டு மறைப்பரப்பாளராக வந்த இவர் தென்னிந்தியா முழுவதிலும் பல காலம் சமயப் பணியாற்றியிருக்கிறார். இந்தியாவில் இவர் மொத்தம் 40 ஆண்டுக் காலம் பணியாற்றியிருக்கிறார். இக்காலகட்டத்தில் தொகுத்த ஏராளமான செய்திகளை அவர்

“தென்னிந்தியக் கிராம தெய்வங்கள்” என்னும் நூலாக வெளியிட்டார்”[16] என்று ஒயிட்ஹெட்டின் பணிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார் பக்தவத்சலபாரதி. இதுபோல் பார்த்தலோமியோ சீகன் பால்கு ஜெருமானிய மொழியில் எழுதிய தென்னிந்தியக் கடவுள்களின் வம்சாவளி என்னும் நூலும், அபே.ஜே.ஏ. துபுவா தமிழகத்தின் உயர்சாதி மக்களிடம் பழகி அவர்களது வழக்கங்கள், மத நம்பிக்கைகள் ஆகியன குறித்து எழுதிய “இந்திய மக்கள் : மதம் - பழக்க வழக்கங்கள் நிறுவனங்கள்” என்னும் நூலும் இன்றியமையாதனவாகும். வில்பெர் தியோடர் எல்மோர் என்னும் ஐரோப்பியப் பாதிரியாரும் திராவிடக் கடவுளர்கள் என்ற நூலை ஆய்வு செய்து எழுதி வெளியிட்டார். மறைப் பணியாளர்கள் பெரும்பாலும் இங்குள்ள மக்களை அறிந்துகொள்ளும் நோக்கில் செய்த ஆய்வுகள் இனவரைவியல் ஆய்வுகளாக பரிணமித்திருந்தன.

எட்கர் தர்ஸ்டன் தென்னிந்தியாவில் உள்ள பல்வேறு சாதிகளையும், கிளை சாதிகளையும், அவர்களது பழக்கவழக்கங்கள், அவர்களது பண்பாட்டு நடைமுறைகள், தொழில்கள் ஆகியனவற்றைப் பற்றி விரிவாக ஆய்வு செய்தவர் என்று கூறப்படுகிறது. எட்கர் தர்ஸ்டன் இனவரைவியல் ஆய்வின் முன்னோடிகளில் முதன்மையானவர். இவரது ஆய்வுகள் வடக்கில் கோண்டுகள் முதல் தெற்கில் முக்குவர் வரை விரிவான தளத்தைக்கொண்டிருந்தது. அவருடைய குலங்களும் குடிகளும் பற்றிய நூல்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் ஏழு தொகுதிகளாக வெளியிடப்பட்டன. “வடக்கே கோண்டுகள் தொடங்கி தெற்கே தென்குமரியின் முக்குவர் வரை பழங்குடிகள், சாதிகள், கிளைச்சாதிகள், அவற்றையடுத்த உட்பிரிவுகள், இவற்றின் கண் அடங்கும் குலப்பிரிவுகள் எனக் குடிகள் தொடங்கி குலங்கள் வரை பல நிலைகளில் அடையாளப்பட்டுக் கிடந்த மக்களின் உடற் கூறுகள், சமூக முறை, மணமுறைகள், சடங்குமுறைகள், பழக்க வழக்கங்கள் எனப் பலவகையான தகவல்களைத் தொகுத்தார்”[17] எனக் கூறப்படுகிறது. இவர் ஆங்கிலேயர் ஆட்சியில் 1885ஆம் ஆண்டு சென்னை அருங்காட்சியகத்தின் பொறுப்பேற்றிருந்தார், ஆங்கில அரசு அவரை இனவியல் ஆய்வுப் பணியை செய்வதற்குப் பணித்தது. 1901 முதல் பல ஆண்டுகள் அவர் செய்த ஆய்வுகள் தொகுக்கப்பட்டன. 1906இல் தென்னிந்திய மானிட இன இயல் என்னும் நூலும் 1909இல் சென்னை அருங்காட்சியகத்தினால் ஏழு தொகுதிகளாக வெளியிடப்பட்ட “தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்” என்னும் நூலும் இன்றியமையாதனவாகும். இத்தொகுதிகள் அனைத்தும் மானிடவியல் ஆய்வாளர்களால் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றனவாகும். அவருடைய ஆய்வுகள் பரந்துபட்டனவாக இருந்தாலும் குறிப்பிட்ட ஆய்வுகளை எடுத்துக் காட்டுகிறார் க.ரத்னம்.

1887 - ராமேஸ்வரம் தீவு சார்ந்த கடல்வாழ் உயிரினங்ள்

1888 - ரோமன், போர்த்துக்கீசிய நாணயங்களின் பட்டியல்

1890 - தென்னிந்தியாவில் வீழ்ந்த எரிகற்களின் பட்டியல்

1893 - டெல்லி சுல்தான்களின் நாணயங்களின் பட்டியல்

1894 - மலபார் கடற்கரையிலான பயணக் குறிப்புகள்

1896 - நீலகிரி வாழ் தோடர் கோத்தர் பற்றிய மானிடவியல் குறிப்புகள்

1897 - படகர், இருளர் பற்றிய மானிடவியல் குறிப்புகள்

1898 - சென்னையிலும் மலபாரிலும் வாழும் ஆங்கிலோ இந்தியர்களின் பற்றிய கட்டுரைகள்

1899 - ஆனைமலை வாழ் பழங் குடிகள்,சேர்வராயன், மலைவாழ் மலையாளிகள், திராவிடர் தலை அமைப்பு, திராவிடர் பற்றிய பிரச்சினை ஆகிய கட்டுரைகள்

*1900 - மலபார் தென் கன்னட கடற்கரையில் மீன்பிடித் தொழில்*

*1901 - நரபலி, தீமிதி, தந்தம் கடைதல் பற்றிய குறிப்புகள்*

*1903 - தென்னிந்தியர் திருமண வழக்கங்கள்"*[18] என்று அவருடைய முக்கியமான ஆய்வுகள் குறித்துக் கூறப்படுகிறது. இவருடைய ஆய்வுகளை மையமிட்ட பல்வேறு ஆய்வுகள் தமிழில் நிகழ்த்தப்பட்டுள்ளன.

### பிற மேலை நாட்டு ஆய்வாளர்கள்

எட்கர் தர்ஸ்டன் முதன்மையான ஆய்வாளராக இருந்தபோதிலும் வேறு பல ஆய்வாளர்களும் அரசுப் பணியின் பொருட்டு வந்தவர்கள் இனவரைவியல் ஆய்வுகளை மேற்கொண்டனர் எனக் காணமுடிகிறது. "பிரந்தாபெக் மேற்கொண்ட கொங்குப் பகுதியின் வேளாண் சமூக ஆய்வு, லூயி துய்மோன் மேற்கொண்ட பிறமலைக் கள்ளர்கள் பற்றிய ஆய்வு, நிஷிமூரா நகரத்தாரிடம் செய்த ஆய்வு, கிறிஸ் ஃபுல்லர் மேற்கொண்ட மதுரை மீனாட்சியம்மன் குறித்த ஆய்வு, மைக்கேல் மொஃபாத் ராபர்ட் டெலீஜ் போன்றோரின் அடித்தள மக்கள் ஆய்வுகள், கரின் கபாடியா மேற்கொண்ட திருச்சி வட்டார சாதிகளின் ஆய்வு, ட்ராவாக்கின் தமிழ்க் குடும்ப முறை குறித்த ஆய்வு இன்னும் பிற ஆய்வுகள் அனைத்தும் தமிழர் இனவரைவியலை நுட்பமாக்கிய ஆய்வுகளாகும்"[19] என்று குறிப்பிடுகிறார் பக்தவத்சலபாரதி. இது போன்ற ஆய்வுகள் தமிழரின் தொன்மையான பழக்கவழக்கங்களையும், சாதி அமைப்புகளையும், திருமண முறைகளையும், சாதிகளின் சடங்கு முறைகளையும் பற்றி அறிவதற்கு ஏதுவாக அமைந்தன.

### தமிழ் அறிஞர்களின் இனவரைவியல் ஆய்வுகள்

தமிழ் இலக்கியத்திலும், வட்டார ஆய்வுகளிலும் புலமைகொண்ட ஆய்வறிஞர்கள் தமிழ்ச் சாதியினர் குறித்த ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர். ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் கள்ளர் சரித்திரம் (1923), சுவாமிநாத உபாத்தியாயரின் சூரிய குல கள்ளர் சரித்திரம் (1926), ஆசீர்வாத உடையார் தேவரின் மறவர் சரித்திரம் (1938), பி.முத்துத் தேவரின் மூவேந்தர் குலத்துத் தேவமார் சமூக வரலாறு (1982), ஆகியோரின் ஆய்வுகள் குறிப்பிட்ட சமூகத்தவர் பற்றிய செய்திகளையும் அவர்களது பண்பாட்டு வழக்கங்களையும் குறித்து அமைகின்றன. இவர்களுடைய ஆய்வுகளைத் தொடர்ந்து தமிழில் புத்தாயிரத்திற்குப் பிந்தைய இனவரைவியல் ஆய்வுகள் பல்வேறு இனங்களின் வரலாற்றை மறு கட்டமைப்புச் செய்யும் வகையில் உருவாகி வளர்ந்தன. மாற்குவின் அருந்ததியர் வாழும் வரலாறு (2001), பத்மபாரதியின் நரிக்குறவர் இனவரைவியல் (2004), பக்தவத்சல பாரதியின் தமிழகப் பழங்குடிகள் (2008), நாஞ்சில் நாடனின் நாஞ்சில் நாட்டு வெள்ளாளர் வாழ்க்கை (2008), மணி.கோ. பன்னீர்செல்வத்தின் குறவர் பழங்குடி (2009), ரா.சுந்தரவந்தியத்தேவனின் பிறமலைக் கள்ளர் வாழ்வும் வரலாறும் (2011), ஆ.தனஞ்செயனின் குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும் (1996) ஆகிய ஆய்வுகள் தமிழில் இனவரைவியல் ஆய்வினை முன்னெடுத்தனவாகக் காணப்படுகின்றன. இன்றைய சூழலிலும் இனவரைவியல் ஆய்வுகளை மூத்த ஆய்வாளர்கள் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

### இலக்கியத்தில் இனவரைவியல்

தமிழ் இலக்கியங்கள் தோன்றி வளர்ந்த காலத்தை அறுதியிட முடியாதெனினும் சங்க கால இலக்கியங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர்தம் வரலாற்றை, வாழ்வியலை எடுத்தியம்புகின்றமையை அறியலாம். இலக்கியங்களில் காணப்படும் வாழ்வியல் சார்ந்த பதிவுகள் இனவரைவியல் பதிவுகளோடு ஒப்பிடத்தக்கனவாக அமைகின்றன. பாடல்கள்

புனைவெனினும் இனவரைவியல் பண்புகளை உடையதெனக் கொள்ளலாம். ஓர் இனவரைவியலாளன் சேகரிக்கும் தரவுகள் குறிப்பிட்ட ஓர் இனக்குழு மனிதர்களைக் குறித்ததாக அமைவது போல் திணை, துறை வகுக்கப்பட்ட சங்கப் பாடல்கள் குறிப்பிட்ட திணை சார்ந்த மக்கள், விலங்குகள், தொழில்கள் குறித்து அறிய ஏதுவாக அமைகின்றன. எனவே இலக்கியத்தில் இனவரைவியல் சார்ந்த கூறுகள் காணப்படுகின்றன. தற்காலத்தில் நாவல்கள் புனைவாக இருந்தாலும் படைப்பாக்க உத்தியாக இனவரைவியல் தரவுகளைக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. குறிப்பிட்ட நிலம் சார்ந்த மக்களின் வாழ்வியல் அமைந்திருக்கும் விதத்தினைத் தம் படைப்புகளில் விளக்கி எழுதுகின்றமையை அறிய முடிகிறது. இனவரைவியலாளனுக்கும் நாவலாசிரியனுக்கும் இடையிலான தொடர்பு காணப்படுகிறது. ஓர் இனவரைவியலாளன் தான் கண்டு கேட்டு அவற்றை பதிவு செய்கிறார். நாவலாசிரியர் தன் சுய அனுபவத்தினாலும், களஆய்வு முறையாலும், நூலறிவு கொண்டும் தான் படைக்கும் இலக்கியத்தில் இனவரைவியல் தரவுகளை இணைத்து விட முடிகிறது. சுய அனுபவம் எழுத்தாளனுக்கு இனவரைவியல் செய்திகளுக்குத் தேவையாக அமைகிறது. “இங்கு சுய அனுபவம் என்பது நாவலாசிரியன் தான் பிறந்து வளர்ந்த சமூகச் சூழலையோ, தான் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகச் சூழலையோ தான்மேற்கொண்டிருக்கும் தொழில் அடிப்படையில் பெறும் அனுபவங்களையோ மையமாகக் கொண்டு நாவல் எழுதுவதாகும். இம்முறையில் நாவலாசிரியனுக்கு மிகவும் இயல்பாக இனவரைவியல் தரவுகள் கட்டிவிடுகின்றன”[20] என்று குறிப்பிடுகிறார் ஆ.சிவசுப்பிரமணியன். எனவே நாவலாசிரியனுக்கும் இனவரைவியலாளனுக்குமான தொடர்பு அவர்கள் மக்களிடமிருந்து தரவுகளைப் பெறும் வழி வெவ்வேறாக இருந்தாலும் இருவருக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. நாவலாசிரியர்கள் தாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சூழலிலிருந்தே தமக்கான கதைக் கருவைத் தேர்வு செய்கின்றனர் என்பதால் அவர் சார்ந்த மக்களைக் குறித்த பல்வேறு செய்திகளை கதையின் பொருட்டு கூறுவார் எனலாம். அவை யாவும் இனவரைவியல் சார்ந்த பதிவுகளாகவே அமையும். தலைமுறைகள் நாவலின் முன்னுரையில் நீலபத்மநாபன் குறிப்பிடும் செய்தி நாவலாசிரியர் இனவரைவியல் ஆய்வாளனைப் போல மாறும் விதத்தைக் குறிப்பதாகும். “நான் பிறந்து வளர்ந்து இன்றைய என் வயது அத்தனைக்கும் எனக்குப் பழக்கமான ஒரு சமூகத்தின் நாடித்துடிப்புகள், பூர்விக வரலாற்று விளக்கங்கள், ஆசார அனுஷ்டானங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், விழாக்கள், விளையாட்டுக்கள், வாழையடி வாழையாய் வந்தடைந்த கதைகள், பாடல்கள், பழமொழிகள், பிராந்திய கொச்சை வார்த்தைகள், பேச்சு வழங்குகள், தொனி விஷேசங்கள், வாக்கிய அமைப்புகள் இத்யாதி இத்யாதி - யானவைகளை கூடிய மட்டும் சிந்தாமல் சிதறாமல் கலாப்பூர்வமாக வெளிப்பிரகடனம் பண்ண இங்கே கதைவித்தானாக பக்கபலமாய் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது தான்”[21] நாவலில் தான் ஒரு இனவரைவியல் செய்திகளையே திரட்டிக் கொடுத்திருப்பதாகக் கூறுகிறார் நீலபத்மநாதன். நாவல்கள் இனவரைவியல் சார்ந்த பதிவுகளைக் கொண்டிலங்குவது நாவலாசிரியர் சார்ந்த அல்லது அவர் குறிப்பிட்டுக் கூறும் சமூக மாந்தர்களைக் குறித்து கொண்டிருக்கும் அனுபவத்தினால் விளைவது ஆகும்.

## முடிவுரை

படைப்பாளி தான் வாழும் சமூகத்தின்மீது தன் எதிர்வினையாகவே படைப்புகளை வெளியிடுகிறான். சமூக மாந்தர்கள் பற்றிய தனது கருத்துக்களை படைப்பில் வெளிப்படுத்தும்போது சமூக மனிதர்களைக் குறித்த தகவல்களாக கூறுவதைக் காணமுடிகிறது. இவ்வாறு மனிதர்களைப் பற்றியத் தகவல்கள் வெளிப்படும்போது இனவரைவியல் தகவலாக அவை உருமாற்றம் அடைகின்றன. நாட்டார் வழக்காறுகளைத் தொகுத்து அதனைக் கதையாக்கும் போது அப்படைப்பில் ஒரு குறிப்பிட்ட இனத்தினரின் இனவரைவியல் தரவுகள் கிடைக்கின்றன. இனவரைவியலாளனைப் போன்று அறிவியல் முறையிலான தகவல்களாக இல்லாமல் புனைவுகளாக இருந்தாலும் அதனைக்கொண்டு அச்சமூகத் தினரின் பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை உய்த்துணர முடியும். “படைப்பாளி பதிவு செய்திருக்கிற வாழ்வியலையும் இனக்குழுவின் நடைமுறை வாழ்வியலையும் ஒப்பிட்டு பொருத்தங்களையும் விடுபடல்களையும் திரிபுகளையும் வெளிக்கொணவர்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன இனவரைவியல் ஆய்வுகள். இது ஒருவகையில் இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள உறவை நுட்பமாக ஆய்வு செய்ய புதிய சமூகவியல் மாதிரிகளை வெளிக்கொணர ஏதுவாக இருக்கிறது”[21] என்னும் கூற்றானது படைப்பாளியின் பங்கான புனைவின் தன்மைகளை விலக்கி அதில் ஓர் இனத்தின் பண்பாட்டு வழக்கங்கள், தொல்கதைகள், வழக்காறுகள் ஆகியன அடங்கிய இனவியல் தகவல்களைப் பெறும் நோக்கில் இனவரைவியல் இலக்கியங்களை அணுகப் பயன்படுகிறது.

## குறிப்புகள்

1. Oxford Etnlish –English – Tamil Dictionary, p.490
2. சி.மகேசுவரன், இனக்குழுவரைவியல், ப.7
3. மேலது, ப.7
4. ஆ.தனஞ்செயன், விளிம்பு நிலை மக்கள் வரலாறுகள், ப.3
5. தி.அன்புச்செல்வன், அரிமா நோக்கு, காலாண்டிதழ், 3:4, சனவரி 2010, ப.26
6. ஞா.ஸ்டீபன், இலக்கிய இனவரைவியல், ப.vi
7. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.21
8. மேலது, ப.31
9. ஞா.ஸ்டீபன், மு.கூ.நூ, பக்.13-14
10. பக்தவத்சலபாரதி, பண்டைத்தமிழ்ப் பண்பாடு, ப.32
11. சிலம்பு நா.செல்வராசு, சங்க இலக்கிய மறுவாசிப்பு, ப.11
12. டி.டி.கோசாம்பி, பண்டைய இந்தியா வரலாறும் பண்பாடும், ப.25
13. மணி.கோ.பன்னீர்செல்வம், குறவர் பழங்குடி, ப.2
14. ஆ.தனஞ்செயன், மு.கூ.நூ, பக்.3-4
15. சுப்புராயலு (க.ஆ), மாற்றுவெளி, ஆய்விதழ் - 11, ப.17
16. ஹென்றி ஒயிட்ஹெட், தென்னிந்தியக் கிராம தெய்வங்கள் முன்னுரையில் பக்தவத்சலபாரதி, ப.8
17. பத்மபாரதி, கரசூர், நரிக்குறவர் இனவரைவியல், ப.8
18. க.ரத்னம் (மொ.ஆ), நரிக்குறவர் இனவரைவியல், ப.8
19. பத்மபாரதி, கரசூர் நரிக்குறவர் இனவரைவியல், பக்.9-10
20. ஆ.சிவசுப்பிரமணியன், இனவரைவியலும் தமிழ் நாவலும், ப.10
21. நீலபத்மநாதன், தலைமுறைகள் (முன்னுரையில்), ப.4